This question paper contains 7 printed pages]

*Your Roll No*...............

**233**

**B.A. (PROGRAMME)/I Sem. B**

TAMIL LANGUAGE (A) —Paper A

Functional Grammar and Skills in Language use

(Admission of 2011 and onwards).

*Time : 3 Hours* *Maximum Marks* : 75

*(Write your Roll No. on the top immediately on receipt of this question paper.)*

I. (*i*) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடைதருக: 3×5=15

(1) எழுத்து என்றால் என்ன? விவரிக்க.

(2) உயிரெழுத்துக்களை விவரிக்க.

(3) மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக் களைச் சான்றுகளுடன் விளக்குக.

(4) குற்றியலுகரம், குற்றியலிகரம் குறித்து விளக்குக.

(5) பின்வரும் சொற்களின் பொருளுணர்ந்து வாக்கியங்களில் அமைக்க:

(*a*) அரம் - அறம்.

(*b*) கலம் - களம்.

(*c*) வளம் - பழம்.

(*d*) பானம் - பாணம்.

(*e*) ஈந்தான் - ஈன்றான்.

(*ii*) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2×5=10

(1) சொல் என்றால் என்ன? விளக்குக.

(2) பெயர்ச்சொல் என்றால் என்ன? சான்று தந்து விளக்குக.

(3) இலக்கண வளகச் சொற்களை விளக்குக.

(4) இயற்சொல் என்றால் என்ன? எடுத்துக் காட்டுகளுடன் விளக்குக.

(*iii*) ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2×5=10

(1) வாக்கியம் என்றால் என்ன? விளக்குக.

(2) வாக்கிய வகைகளைச் சான்று தந்து விளக்குக.

(3) வல்லினம் மிகும் இடங்களைச் சான்றுகளுடன் விளக்குக.

(4) உடம்படுமெய் என்றால் என்ன? விளக்குக.

(*iv*) உரையாடல் என்றால் என்ன? சான்றுக்கு இருவரிடையே நிகழும் ஓர் உரையாடலை எழுதுக. 10

அல்லது

உரையாடலில் கவனிக்க வேண்டிய சில உத்திகளை விளக்குக.

II. (*i*) பத்தி எழுதுவது (Paragraph Writing) எப்படி? விளக்குக. 10

அல்லது

'ஆசிரியர் தினம்' குறித்து ஒரு பத்தி எழுதுக.

(*ii*) கடிதத்தின் வகைகளை விளக்கி வகை 10

அல்லது

உங்கள் பகுதிக்கு ஒரு நுலகம் கேட்டு சம்மந்தம் பட்ட அதிகாரிக்கு ஒரு கடிதம் எழுதுக.

(*iii*) சுருக்கி எழுதுகல் (Precis Writing) என்றால் என்ன? அதன் பயன்கள் யாவை? 10

**அல்லது**

பின்வரும் பத்தியை அதன் பொருள் கெடாதவாறு சுருக்கி எழுதுக.

உலகப் புகழ் பெற்ற பாண்டிய நாட்டுத் துறைமுகப் பட்டினம் கொற்கையாகும். இத்துறை முகம் ஒரு வளைகுடாவில் இருந்ததனால் முத்துக் குளிக்கும் இடமாகவும் சங்கு எடுக்கும் இடமாகவும் விளங்கியது. கொற்கையில் கிடைத்த முத்துக்கள் உலகப் புகழ் பெற்றவையாகும். சங்கப் புலவர்களும் இங்குக் கிடைத்த முத்துக்களின் பெருமையைப் புகழ்ந்துள்ளனர் கொற்கை பாண்டிய இளவரசர்களுடைய இருக்கையாகவும்

திகழ்ந்தது. யவனர்கள் கொல் கொய் என்று வழங்கிய துறை முகம் கொற்கையே ஆகும். கடல்கொண்ட கபாடபுரம் கொற்கையாக இருக்கலாம் எனச்சில அறிஞர்கள் கருதுவர். பாண்டிய நாட்டின் தென் கோடியில் கன்னியாகுமரிக்கு அருகில் குமரித்துறை முகம் இருந்தது. இது துறைமுகமாகவும் புனித நீராடும் இடமாகவும் கருதப்படுகிறது. தமிழ் நாட்டவரும் மற்றையோரும் இங்குப் புனித நீராடுவதுண்டு. குமரித் துறை முகத்துக்கருகில் குமரி என்னும் ஊரும் அங்கு ஒரு கப்பில் அமைக்கும் தொழிற் சாலையும் இருந்ததென்று யவனர்களின் குறிப்புகளிலிருந்து அறிகிறோம். பாண்டிய

நாட்டின் மேற்குக் கடற்கரையில் ஆய்நாட்டில் விழிஞம் என்றும் துறை முகப்பட்டினம் இருந்தது. ஆய் நாட்டில் 'எலங்கோன்' என்னும் துறை முகம் இருந்த தென்று தாலமி என்னும் ஆசிரியர் கூறியுள்ளது விழிஞம் துறைமுகமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.